**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி.**

**(அத்தியாயம் XXII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)**

**டி.வி.சி. எண் : 2/2018**

**பு.சா.1 தனலட்சுமி**

**நாள்.07.10.2022**

**1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் 10 ஆம் வகுப்பு வரை படித்திருக்கிறேன். நான் தற்போது பேன்சி கடையில் வேலை பார்த்து வருகிறேன். நான் மாதம் ரூ.5000/– சம்பளம் வாங்கி வருகிறேன். என்னுடைய திருமணம் 1 ஆம் எதிர்மனுதாரருடன் என்னுடைய வற்புறுத்தலின் பேரில் நடைபெற்றது என்று சொன்னால் சரியல்ல. எங்களது திருமணம் காதல் திருமணம் ஆகும். திருமணத்தின் ஆரம்ப கட்டத்தில் எங்களது திருமணத்தை எங்களது வீட்டில் ஒப்புக்கொண்டார்கள். ஆனால் 1 ஆம் எதிர்மனுதாரின் வீட்டில் ஒப்புக்கொள்ளவில்லை. 1 ஆம் எதிர்மனுதாரர் வீட்டில் எங்களை ஏற்றுக்கொள்ளாத காரணத்தால் 1 ஆம் எதிர்மனுதாரரின் வீட்டிற்கு ஊர்க்காரர்களுடன் சென்று எங்களை ஏற்றுக்கொள்ள சொல்லி 1 ம் எதிர்மனுதாரரின் பெற்றோரிடம் கேட்டோம் என்று சொன்னால் சரிதான். ஆனால் அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்று சொன்னால் சரிதான். அதனால்தான் மீண்டும் ஊர்பஞ்சாயத்தில் வைத்து மீண்டும் பேசினோம் என்றால் சரிதான். அப்போதும் 1 ம் எதிர்மனுதாரரின் பெற்றோர்கள் எங்கள் திருமணத்திற்கு சம்மதம் தெரிவிக்கவில்லை என்று சொன்னால் சரிதான். அதன் பிறகு நான் அனைத்து மகளிர் காவல் நிலையம் பர்கூரில் புகார் கொடுத்தேன் என்று சொன்னால் சரிதான். அந்த புகாரில் எனது கணவர் வேறு பெண்ணை மறுமணம் செய்வதாக புகார் கொடுத்தேனா என்றால் அதற்காக கொடுக்கவில்லை.

2) அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் நான் புகார் கொடுத்த பிறகு 1 ம் எதிர்மனுதாரரின் வீட்டில் எங்கள் திருமணத்தை ஏற்றுக்கொண்டார்கள். போலீசார் மிரட்டியதின் பேரில் எங்கள் திருமணத்தை ஏற்றுக்கொண்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. அவர்களை யாரும் மிரட்டவில்லை. 1 ஆம் எதிர்மனுதாரரின் பெற்றோர்கள் எந்த காலத்திலும் எங்கள் திருமணத்தை ஏற்றுக்கொள்ளவில்லை என்று சொன்னால் காவல் நிலையத்தில் ஒத்துக்கொண்டார்கள். காவல் நிலையத்தில் ஒரு தேதியை

குறித்து கொடுத்தார்கள்.

3) காவல் நிலையத்தில் எங்கள் திருமண தேதியை போலீசார் முடிவு செய்து சொன்னார்கள் என்று சொன்னால் சரிதான். போலீசார் சொன்னதின் பேரில் எங்கள் ஊர்க்காரர்கள் முடிவு செய்து எங்கள் திருமணத்தை நடத்தி வைத்தார்கள் என்று சொன்னால் சரிதான். எங்கள் திருமணம் கட்டாயத்தின் பேரில் நடைபெற்றது என்று சொன்னால் சரியல்ல. எங்கள் திருமணத்தில் 1 ஆம் எதிர்மனுதாரருக்கு உடன்பாடு இல்லை என்று சொன்னால் சரியல்ல. 1 ஆம் எதிர்மனுதாரர் எங்கள் திருமணத்திற்கு உடன்பட்டு இருந்தால் இவ்வளவு பிரச்சனைகள் ஏற்பட்டிருக்காது என்று சொன்னால் அவருக்கு விருப்பம்தான். அவரது அப்பா அம்மா காரணமாகத்தான் பிரச்சனை. 1 ஆம் எதிர்மனுதாரர் மூலமாக திருமணத்திற்காக எவ்வித பிரச்சனையும் இல்லை என்று சொன்னால் அவருடைய அம்மா பேச்சை கேட்டு 1 ஆம் எதிர்மனுதாரர் திருமணத்திற்கு ஒப்புக்கொள்ளவில்லை.

4) 1 ஆம் எதிர்மனுதாரரும் அவரது பெற்றோரும் விரும்பாததால் தான் காவல் நிலையத்தில் ஊர்மக்களுடன் சேர்ந்து இந்த திருமணத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டது என்றால் சரிதான். திருமணத்திற்கு பிறகு நானும், 1 ஆம் எதிர்மனுதாரரும் எங்கள் ஊரில் இருந்தோம். திருமண நாளில் இருந்தே 1 ஆம் எதிர்மனுதாரருக்கும் எனக்கும் பேச்சு வார்த்தை கிடையாது என்று சொன்னால் சரியல்ல. பேசிக்கொண்டுதான் இருந்தோம்.

5) நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் பாரா எண்.5 ல் 3 வது வரியில் எனக்கு தாலி கட்டிய நாள் முதல் 1 ஆம் எதிர்மனுதாரர் என்னுடன் பேசவில்லை என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது என்று சொன்னால் சரிதான். நான் முன்னுக்கு பின் முரண்பட்டு சாட்சியமளிப்பதால் என்னுடைய சாட்சிய சங்கதிகள் ஏற்றுக்கொள்ளதக்கவை அல்ல என்று சொன்னால் சரியல்ல. திருமணம் நடந்த நாள் முதல் மற்றும் அதற்கு பின்னிட்டும் எனக்கும் 1 ஆம் எதிர்மனுதாரருக்கும் தாம்பத்தியம் நடைபெறவில்லை என்று சொன்னால் சரிதான்.

6) திருமணத்திற்கு பின்னிட்டு எனக்கும் 1 ஆம் எதிர்மனுதாரருக்கும் பேச்சுவார்த்தை மற்றும் பராமரிப்பு, எவ்வித தொடர்பும் இல்லை என்று சொன்னால் சரிதான். நான் திருமணம் ஆன சில நாட்களிலேயே பேச்சு வார்த்தை இல்லாத காரணத்தால் எனது பெற்றோர் வீட்டிற்கு சென்று விட்டேன் என்று சொன்னால்

சரியல்ல. நான் தற்போது எனது தாயாருடன் வசித்து வருகிறேன். நான் தற்போது 6 1/2 வருடங்களாக எனது தாயாருடன் வசித்து வருகிறேன். எனக்கு திருமணம் நடந்து 6 1/2 வருடங்கள் ஆகிறது.

7) திருமணம் நடைபெற்ற இரண்டாம் நாளிலிருந்து நான் எனது பெற்றோருடன் வசித்து வருகிறேன் என்றும், 1 ஆம் எதிர்மனுதாரர் மற்றும் அவர் பெற்றோருடன் சேர்ந்து வாழவில்லை என்று சொன்னால் சரியல்ல. 1 ஆம் எதிர்மனுதாரரோடும், அவருடைய பெற்றோரோடும்தான் வசித்து வந்தேன். நான் அவர்களோடு வசித்து வந்தததாக சொல்வது இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. 1 ஆம் எதிர்மனுதாரர் திருமணத்தின் போது கிருஷ்ணகிரியில் உள்ள தனியார் பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்து வந்தார் என்று சொன்னால் சரிதான்.

8) நான் 1 ஆம் எதிர்மனுதாரர் மீது புகார் கொடுத்த காரணத்தால் அவரை பணியிலிருந்து நீக்கி விட்டார்கள் என்று- சொன்னால் சரியல்ல. 1 ஆம் எதிர்மனுதாரரை பணியிலிருந்து எப்போது நீக்கினார்கள் என்று தெரியாது. அவர் தற்போது அந்த பள்ளியில் பணிபுரியவில்லை. ஆனால் வேறு பள்ளியில் பணிபுரிந்து வருகிறார். எனது புகாரிலோ, விசாரணை வாக்குமூலத்திலோ வேறு பள்ளியில் பணிபுரிந்த விவரத்தை இந்த மனுவில் நான் சொல்லயிருக்கிறேனா என்றால் தற்போது எனக்கு ஞாபகம் இல்லை.

9) தற்போது 1 ஆம் எதிர்மனுதாரர் பள்ளியில் வேலை செய்யவில்லை என்றும் அவ்வாறு வேலை செய்தால் என்ன பள்ளியில் வேலை செய்கிறார் என்று நான் குறிப்பிட்டு வாக்குமூலத்தில் சொல்லிருப்பேன் என்று சொன்னால் அவர் பள்ளிக்கு வேலைக்கு செல்கிறார். ஆனால் என்ன பள்ளி என்று எனக்கு தெரியவில்லை. 1 ஆம் எதிர்மனுதாரர் கிருஷ்ணகிரியில் உள்ள ஐயப்பன் கோவில் செல்லும் சாலையில் ஆரியாஷ் என்ற பெயரில் ஜெராக்ஸ் கடை நடத்தி வருகிறார். மேற்படி விவரத்தை எனது புகாரிலோ, சாட்சியத்திலோ கூறியுள்ளேனா என்றால் மேற்படி கடையை தற்போது ஆறு மாத காலமாகத்தான் வைத்துள்ளார். நான் சொல்வது போல் 1 ஆம் எதிர்மனுதாரர் எவ்வித கடையும் நடத்தவில்லை என்று சொன்னால் சரியல்ல.

10) 1 ஆம் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழவேண்டும் என்பதற்காக நானும், எனது தகப்பனாரும் 1 ஆம் எதிர்மனுதாரர் வீட்டிற்கு சென்றோம் என்று பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் சமூக நல அதிகாரியிடம்

கொடுத்த புகாரில் 7 வது பக்கத்தில் நடுவில் என் அம்மாவை அழைத்து கொண்டு அவர் வீட்டிற்கு சென்றேன் என குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். ஆனால் நானும் எனது அப்பா, அம்மா இருவரையும் அழைத்து சென்றேன். நான் உண்மையாகவே எனது பெற்றோரை அழைத்து சென்றிருந்தால் இருவரையும் அழைத்து சென்றிருந்ததாக குறிப்பிட்டிருப்பேன் என்று சொல்லியிருப்பேன் என்று புகாரில் அம்மாவையும், விசாரணை வாக்குமூலத்தில் அப்பா என்றும் முரண்பட்டு சொல்லியுள்ளேன் என்று சொன்னால் நான் பலதடவை எனது பெற்றோரை அழைத்து சென்றதால் அவ்வாறு குறிப்பிட்டுள்ளேன். நான் புகாரிலோ, விசாரணை வாக்குமூலத்திலோ, பல தடவை பெற்றோரை அழைத்து சென்றதாக குறிப்பிட்டுள்ளேனா என்றால் எனக்கு தெரியவில்லை.

11) 1 ஆம் எதிர்மனுதாரர் என்ன பொருள், பணம், நகை வேண்டுமென குறிப்பிட்டு வரதட்சணை கேட்டார் என்று என்னுடைய புகாரிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ கூறியுள்ளேனா என்றால் நீ வரும் போது ஒன்றும் இல்லாமல்தான் வந்துள்ளாய் எதுவும் எடுத்து வரவில்லை என்று கூறினார்கள். எதிர்மனுதாரர்கள் என்னிடம் வரதட்சணை எதுவும் கேட்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு கேட்டிருந்தால் நான் குறிப்பிட்டு சொல்லியிருப்பேன் என்று சொன்னால் சரியல்ல.

12) எதிர்மனுதாரர்கள் என்னை எவ்வித வன் கொடுமையும் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. 1 ஆம் எதிர்மனுதாரரை நான் கட்டாயப்படுத்தி திருமணம் செய்த காரணத்தினால் நான்தான் வன் கொடுமை செய்தேன் என்று சொன்னால் சரியல்ல. 1 ஆம் எதிர்மனுதாரரின் பெற்றோர்களான 2,3 எதிர்மனுதாரர்களை எவ்வித காரணமும் இன்றி காவல் நிலையத்தில் புகார் கொடுத்து அழைய வைத்து மன உலைச்சலுக்கு ஆளாக்கி எதிர்மனுதாரருக்கு நான்தான் வன் கொடுமை செய்ததாக சொன்னால் என்றால் சரியல்ல. 2,3 எதிர்மனுதாரர்கள் ஆரம்பத்திலிருந்தே என்னுடைய திருமணத்திற்கு ஒத்துக்கொள்ளாத காரணத்தால் அவர்களை பழி வாங்கவேண்டுமென்ற காரணத்திற்காக இந்த மனுவில் அவர்களை பெயரளவில் எதிர்மனுதாரர்களாக சேர்த்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

13) திருமணத்திற்கு முன்பு 1 ஆம் எதிர்மனுதாரரை நான்தான் ஒரு தலைபட்சமாக காதலித்து வந்தேன் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய

காதலை ஏற்றுக்கொள்ளாத காரணத்தால் 1 ஆம் எதிர்மனுதாரரை பழி வாங்கவேண்டுமென்ற நோக்கத்தோடு அவர் மீது பொய் வழக்கு போட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. 1 ஆம் எதிர்மனுதாரருக்கு இந்த திருமணத்தில் விருப்பம் இல்லை என்றும், காவல் நிலையத்தில் மிரட்டினார்கள் என்ற காரணத்திற்காகவும், ஊரார் மத்தியில் அவமானம் ஏற்படும் என்பதற்காகவும் கட்டாயத்தின்பேரில் வேறு வழியில்லாமல் திருமணத்திற்கு ஒத்துக்கொண்டார் என்று சொன்னால் சரியல்ல.

14) 1 ஆம் எதிர்மனுதார் தற்போது எந்த வேலையும் இல்லாமல் தனது பெற்றோரை பராமரிக்க முடியாமல் வாழ்ந்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. நான் தற்போது வேலை செய்து போதிய வருமானம் ஈட்டி வருவதால் ஜீவனாம்சம் கேட்க முகாந்திரம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எதிர்மனுதாரருக்கு எதிராக மனுவில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் எதிர்மனுதாரரை பழி வாங்கவெண்டும் என்று சொல்லப்பட்ட புகார் என்பதால் அந்த புகாருக்கு அடிப்படை முகாந்திரம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எந்த முகாந்திரமும் இன்றி எதிர்மனுதாரர்கள் மீது இந்த மனுவை தாக்கல் செய்துள்ள காரணத்தால் செலவுத் தொகையுடன் மனுவானது தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. எதிர்மனுதாரர்களுக்கு சொந்தமாக வீடோ, நிலமோ, இல்லை என்று சொன்னால் சரியல்ல. மனுவில் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட இடத்திற்கான சர்வே எண்களை குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரியல்ல. மனுவில் கேட்டுள்ள எவ்வித பரிகாரமும் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து
காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென
ஒப்புக்கொண்டார்.

S V SHANMUGANATHAN
District Munsif cum Judicial Magistrate
Digitally signed by S V SHANMUGANATHAN
Location: Pochampalli
Date: 2022.10.07 13:04:32 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.